# ஆயர் மடல் ...

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, உழைப்பினால் உலகை உருவாக்கியவரும், உழைப்பை ஆசீர்வதித்தவரும், உழைப்பின் பலனைத் தருகிறவருமான கடவுளின் திருப்பெயரில் உங்களை வாழ்த்துகிறேன் கடவுள் படைத்த உலகத்தில் அவருடைய ராஜ்யம் கட்டப்படும்படியாய் இன்றுவரை அதற்கான வாய்ப்பைத் தருகின்ற நம் ஆண்டவரை ஸ்தோத்தரிப்போம்.

ஒன்பதாவது சபைநாள் பண்டிகையில் பங்கெடுத்துக்கொண்ட ஒவ்வொரு குருவானவர்களுக்காகவும், திருச்சபையின் மக்களுக்காகவும் ஆண்டவரை ஸ்தோத்தரிப்போம்.

நம் திருச்சபையின்மீது உள்ளான கரிசனையோடு அன்புவைத்தும், UAE–ல் திருப்பணியை சிறப்பாக செய்து தொடர்ந்து தன்னுடைய திருமண்டலத்தில் கடவுளின் பணியை செய்யும்படியாய் சென்றிருக்கும் அருள்திரு.எட்வின் ஜான் (CSI Tamil Parish.Sharja) அவர்களுக்காகவும் இம்மாதத்தோடு தம் திருப்பணியை நிறைவேற்றி தன் திருமண்டல தொடர் திருப்பணிக்கு செல்ல இருக்கின்ற நம் தாய் திருச்சபையின் குருவானவர் அருள்திரு.ஜான் பிரைட் (CSI Tamil Parish.Abudhabi) அவர்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்

இம்மாதம் 26-ம் தேதி வெள்ளிக்கிழமை பெண்கள் ஐக்கியசங்க சிறப்பு ஆராதனையாக நடைபெற இருக்கிறது, ஜெபித்துக் கொள்ளுங்கள்.

12-ம் தேதி நடையெற இருக்கும் பொதுக்குழு கூடுகைக்காகவும் ஜெபியுங்கள்.

இம்மாதத்துடன் உங்களுடன்கூடிய ஆண்டவரின் திருப்பணியை நாங்கள் நிறைவுசெய்து எங்களுடைய திருமண்டலத்திற்கு செல்ல இருக்கிறோம். இந்த மேலான வாய்ப்பைத் தந்த ஆண்டவருக்கே துதியையும், கனத்தையும், மகிமையையும் செலுத்துகிறோம். ஊழியத்தில் இந்த வாய்ப்பைத்தந்த முன்னாள் Moderator Most Rev.Dyvasirvadam அவர்களுக்கும் தற்பொழுதைய Moderator Most Rev.Thomas K.Oomen அவர்களுக்கும் எங்களது திருமண்டலத்தின் Bishop Rt.Rev.Dr.M.Joseph – (Diocese of Madurai-Ramnad) ஐயா அவர்களுக்கும் நன்றி செலுத்துகிறேன்.

இந்த மூன்றாண்டுகால ஊழியத்தில் எங்களோடுகூட ஊழியத்தில் ஜெபித்த, உழைத்த, கொடுத்த ஒவ்வொரு திருச்சபை குடும்பத்தினருக்கும், சகோதரர்களுக்கும் உள்ளத்தின் ஆழத்தினின்று நன்றிகளைக் கூறிக்கொள்கிறோம். உங்களுக்காகவும் திருச்சபைக்காகவும் ஜெபித்துக்கொள்கிறோம். வரஇருக்கும் புதிய குருவானவருக்காகவும் ஜெபியுங்கள். கர்த்தாதாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்.

**அன்பரின் பணியில்**

**அருள்திரு.சே.டேவிட்சன் பால் ஜேக்கப்**

தியானம்

## பெந்தேகோஸ்தே அனுபவம்

**யோவான் சுவிசேஷ நூலில் -யோவா:** 20: 19 - 23

ஆண்டவர் இயேசு தமது உயிர்த்தெழுதலுக்குப் பின் சீஷர்களுக்கும் பிறருக்கும் தம்மை உயிருள்ளவராகப் பற்பல சூழ்நிலைகளில், பல நாட்கள் திருக்காட்சியளித்துத் தோன்றினார். பின்னர் பரத்திற்கு ஏகினார்.

அதற்குப்பின் ஒரு நாள் சீஷர்கள் மற்றும் சிலர் ஓரிடத்தில் கூடியிருந்தபோது, அவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியால் நி ரப்பப் பட்டனர். இது பெந்தக்கோஸ்து என்னும் ஐம்பதாவது நாளில் நிகழ்ந்தது. ( அதாவது பஸ்கா பண்டிகைக்குப் பின் 50 வது நாள். வளர்பிறையின் ஐந்து அல்லது ஆறாவது நாள். யூதர்களின் பண்டிகைகள் அனைத்துமே நிலவை அடிப்படையாக கொண்டு உள்ளன ). இந்த வரலாற்றை மிகத்தெளிவாக லூக்கா அப்போஸ்தலர் நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் எழுதுகிறார்.

ஆனால் யோவானோ வேறுவிதமாக எழுதுகிறார். யோவான்: 20: 19 – 23 வாரத்தின் முதல் நாளில் சீஷர்கள் ஒரு வீட்டில் கூடியிருந்தார்கள். யூதருக்குப் பயந்ததினால் கதவுகளைப் பூட்டியிருந்தார்கள் அப்போது இயேசு அங்கு தோன்றி " உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக " என்று வாழ்த்தினார். பின் அவருடைய உடலில் இருந்த தழும்புகளையும் அவர்களுக்குக் காட்டினார். இயேசுவைக் கண்ட சீஷர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தனர்.

அப்போது இயேசு, " தந்தை என்னை அனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் " ( As Father sent me, I send you ) என்று கூறி அவர்கள் மேல் " ஊதி " , " பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் " என்றார். சீஷர்கள் அப்போது தூய ஆவியின் அனுபவத்திற்குள் வந்தனர்.

யோவான் சுவிசேஷக நூல் முழுவதிலும் நாம் இயேசுவும் பரிசுத்த ஆவியாரும் இணைந்தே செயல்படுவதைக் காணலாம்.

**1 ).பரிசுத்த ஆவியானவரின் பணிகள்:**

1:32 புறாவைப்போல் இறங்கி இயேசுவை அருள்பொழிவு செய்தல்
3:6 ; 6:33 ஜீவன் அளிப்பவர்
3:8 பரிசுத்த ஆவியானவர் மிகுந்த ஆற்றலுடன் செயல்படுகிறார்
4:10 பரிசுத்த ஆவியாரே ஜீவத்தண்ணீர்
4:23-24 உண்மையோடும் ஆவியோடும் தொழுதுகொள்ளுதல்
15:26 சத்தியத்தை வெளிப்படுத்தி இயேசுவைக்குறித்துச் சான்று பகர்வார்
16: 7-14 நமக்கு அனுகூலமான உதவியாளர்

**2 ). பரிசுத்த** ஆவியானவரின் **ஆள்தன்மை:**

14:16 நித்தியமான ஆலோசகர்
14: 17 உண்மையை வெளிப்படுத்துபவர்
14: 26 கற்றுத்தருபவர், நினைவூட்டுபவர்

**3). பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளுதல்:**

யோவா: 20:19 – 23 சீஷர்கள் மேல் ஊதி , பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்றார். அத்துடன் சீஷர்களுக்கு முக்கியமான மிகப்பெரிய கட்டளையைக் கொடுத்தார்.
" பிதா என்னை அனுப்பினது போல் நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார்".

இங்கு திரித்துவ கடவுளின் செயல்பாட்டையும் நாம் காண்கிறோம்.

மற்ற மூன்று நற்செயதியாளர்களும் " உலகமெங்கும் போங்கள். போய் சுவிசேஷத்தை சொல்லுங்கள் என்று ஆண்டவர் கட்டளையிட்டார் என்றுதான் எழுதுகிறார்கள். ஆனால் யோவானோ , சீஷர்களை ஆண்டவர் இயேசு " அனுப்பியதாக எழுதுகிறார். இயேசுவிடமிருந்தே பரிசுத்த ஆவியைப் பெற்ற சீஷர்களும் உந்துதல் பெற்று ஆண்டவருக்காகத் ஊழியம் செய்தனர்.
இதுவே யோவான்கூறும் பரிசுத்த ஆவியாரின் அனுபவம். அந்த தெளிவான சிந்தையோடும் உணர்வோடும் அனுபவத்தோடும் பரிசுத்த ஆவியாரின் ஆற்றலினால் ஊழியத்தில் செயல்படுவோம்.

# *செயலரிடமிருந்து.......*

கிறிஸ்துவுக்குள் எனக்கு மிகவும் அன்பானஉடன் விசுவாசிகளே, இயேசுகிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன். கடந்தமாதம் முழுவதும் நம்மை சுகபத்திரமாக காத்து வழிநடத்தி வந்த தேவனுக்கு துதி ஸ்தோத்திரங்களை ஏறெடுப்போம். இந்த புதிய மாதத்திலும் அவ்வண்ணமாக கிருபை நம்மோடிருந்து நம்மை ஆசீர்வாதத்தின் பாதைக்குநேராக வழி நடத்த கர்த்தரின் கரத்தில் நம்மை ஒப்படைத்து காத்திருப்போம்.

கடந்த ஏப்ரல் மாதம் நம் திருச்சபைக்கு ஆசீர்தமானமாதமாக அமைந்தது என்று கர்த்தருக்குள ் விசுவாசிக்கிறேன். நம் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்விலும் இது ஒருமேலான அனுபவமாக அமைந்ததை நினைத்து தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். கடந்தமாதம்

பெரியவெள்ளி ஆராதனையில் நமக்கு தேவனுடைய வார்த்தைகளை பகிர்ந்தளித்த நமது திருச்சபையின் பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் நமது நன்றிகளை கூறுவோம். தேவன் அவர்களை இன்னும் அதிகமாக பிரயோஜனப்படுத்தும் படியாய் வேண்டுவோம்.

விசேஷமாக நமது சபைநாளை சிறப்பித்து அந்நாளுக்குரிய சிறப்புசெய்தி தரும்வண்ணமாக நமது அழைப்பை ஏற்று இங்கு வருகைதந்த நமதுதிருச் சபையின் முதல்போதகர் **அருட்திரு.சுனின் ஸ்பென்சர்** (Rev.SuninSpenzer) அவர்கட்கு நமது திருச்சபையின் ஒவ்வொருவர் சார்பிலும் நன்றிகளை கூறிக் கொள்கிறேன். சபை நாள் மட்டுமன்றி வியாகுல வியாழன், புனிதவெள்ளி, இன்னும் உயிர்த்தெழுந்தநாள் பண்டிகை ஆராதனை ஆகியவற்றிலும் அவர்களது பங்களிப்பு மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது என்று நம்புகிறேன். மேலும் இந்த ஆராதனைகள் அனைத்தும் சிறப்பாக அமைய உறுதுணையாய் இருந்த ஒவ்வொருவருக்கும் எனது நன்றிகளைக் கூறுகிறேன். இன்னும் நமது சபைநாள் சிறப்பு ஆராதனையில் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு அந்த ஆராதனையை சிறப்பித்துதந்த நமது தாய் திருச்சபை போதகர் Rev. John Bright, ஷார்ஜா போதகர் Rev. Edwin

john, SKD துபாய் போதகர் Rev.D.S.Roy, CSI மலையாள திருச்சபை போதகர் Rev. Byju Eapen ஆகியோருக்கும் நமது திருச்சபையின் சார்பில் நன்றிகளை கூறுகிறேன்.

கடந்த மாதத்தில் **திருமதி. ஷாலினி விமலாகோஷி** (Mrs. Salini Vimala Koshy), **திரு.சுரேஷ் ராஜன்** (Mr. Suresh Rajan), **திரு.ஹெவின் ஹேபா** (Mr.Hevin Heba) ஆகியோர் தங்களை நமது திருச்சபையின் கூட்டுறவில் இணைத்துக் கொண்டிருக்கிறார்கள். திருச்சபையாக நாம் அவர்களை நமது கூட்டுறவில் வரவேற்றுக் கொள்வோம்.

இன்னுமாக தொடர்ந்துவரும் நாட்களில் திருச்சபையின் வளர்ச்சிக்காக செயல்படுத்தும் ஒவ்வொரு காரியங்களிலும் நாம் யாவரும் உற்சாகத்தோடும், ஜெபத்தோடும் பங்குபெறுவோம், செயல்படுவோம். தேவன்தாமே நம்மையும் நம் திருச்சபையையும் ஆசீர்வாதத்தின் பாதையில் வழிநடத்துவாராக.

***M.நேசமணி***

## CARTOON OF THE MONTH



# Birthday Celebrants in May – 2017

| Date | Name | Mobile No. |
|---|---|---|
| 02.05.2017 | Mr. Jim Vetha Jose | 0551871742 |
| 02.05.2017 | Master. G.A. Gain | 0554845125 |
| 09.05.2017 | Mr. Anpu Dhas | 0503043679 |
| 10.05.2017 | Mrs. Beula Rani David | 0505432630 |
| 13.05.2017 | Mr. Selvistor Solomon | 0559318750 |
| 15.05.2017 | Mr. George Rose | 0554845125 |
| 16.05.2017 | Mr. T. Selva Kumar | 0502334421 |
| 16.05.2017 | Mr. D. J. Baskar Johnson | 0505855721 |
| 16.05.2017 | Mr. A. Selva Kumar | 0508386851 |
| 18.05.2017 | Mr.R. Aruldhas | 0556763719 |
| 19.05.2017 | Mrs.Salini Vimala Koshy | 0509249930 |
| 20.05.2017 | Mr.Prabu William Carry | 0505736697 |
| 21.05.2017 | Mr. Samuel Selvamony | 0504934806 |
| 23.05.2017 | Mr. C.Hevin Heba | 0553740685 |
| 25.05.2017 | Mr. R.Mahendran | 0529625261 |
| 26.05.2017 | Baby.J.H.Juana | 0552498186 |
| 28.05.2017 | Mr.Suresh Rajan | 0505868173 |

# Wedding Anniversary in May – 2017

| Date | Name | Mobile No. |
|---|---|---|
| 04.05.2017 | Mr. Lawrence<br>Mrs. Augusta | 0566411676 |
| 05.05.2017 | Mr.Prabu William Carry<br>Mrs.Irish Shanthini Delphine | 0505736697 |
| 06.05.2017 | Mr. Aruldhas<br>Mrs. Prasanna | 0556763719 |
| 10.05.2017 | Mr. Savetha<br>Mrs. Asha Julie Flora | 0501161530 |
| 12.05.2017 | Mr. T. Selva Kumar<br>Mrs. Radhika Grace | 0502334421 |
| 13.05.2017 | Mr. John Joseph<br>Mrs. Jessie Beaula | 0502455266 |
| 21.05.2017 | Mr.R.Mahendran<br>Mrs.S.Jothi | 0529625261 |
| 25.05.2017 | Mr.David Sworna Balan<br>Mrs.Yesubai | 0556400635 |
| 26.05.2017 | Mr. Mesiah Dhas<br>Mrs. Suja Jasmine | 0505431241 |

இந்த மாதம் பிறந்த நாளையும், திருமண நாளையும் கொண்டாடும் அனைவருக்கும் திருச்சபையின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

# அறியாமையின் காலம்

**(கலா.4:8). நீங்கள் தேவனை அறியாமலிருந்தபோது சுபாவத்தின்படி தேவர்களல்லாதவர்களுக்கு அடிமைகளாயிருந்தீர்கள்.**

"நீங்கள் தேவனை அறியாமலிருந்தபோது" எனக்கூறுவது புறஜாதியான விசுவாசிகளையும் சில யூதர்களையும் குறிக்கிறது. புறஜாதியார் ஜீவனுள்ள தேவனை அறிந்தவர்களாக இருந்து அனேக விக்கிரகங்களை சேவித்து வந்தர்கள்.(1இரா.11:5). ஆனால் சில யூதர்களும் தேவனை விட்டுவிலகி விக்கிரகங்களை வணங்கி வந்தார்கள். தேவனுடைய கற்பனையை மீறி நடந்தார்கள் (யாத்.32:8). இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களில் யோசேப்பின் வழியாக வந்த எப்ராயிம் கோத்திரம் முதன் முதலாவதாக விக்கிரகங்களை பின்பற்றிப்போய் மறுபடியும் தேவனிடம் திரும்பியது.

இரண்டாவதாக தாண் கோத்திரம் விக்கிரகங்களைப் பின்பற்றிப்போனது. ஆனால் அவர்கள் திரும்பி வரவேயில்லை. இவ்விதமாக யூதர்கள் அனேகர் விக்கிரகங்கனைப் பின்பற்றி அன்னிய தேவர்களை சேவித்தார்கள். மிகப்பெரிய ஞானியாக இருந்த சாலொமோன்கூட வேறே தேவர்களைப் பின்பற்றி தேவனைவிட்டு விலகினார். (1இரா.11:1-3,7) இவ்வாறு புறஜாதியாரும் யூதர்களில் சிலரும் "சுபாவத்தின்படி" மனிதவழக்கத்தின்படி விக்கிரகங்களுக்கு அடிமையாக இருந்தனர்.

"தேவனை அறியாமலிருந்தபோது" எனக்கூறும் போது, இஸ்ரவேலர்கள் தேவனை அறியாமலிருந்தார்கள் எனக் கூற இயலாது காரணம் இஸ்ரவேலர்கள் தேவனை தங்களது தேவனாக ஏற்றுக் கொண்டிருந்தார்கள். ஏற்றுக்கொள்வதற்க்கும், அறிந்துகொள்வதற்கும் அனேக வித்தியாசங்கள் உண்டு. இயேசு தெய்வம் என உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் அவர்மாத்திரமே உலக இரட்சகர் என அறியவில்லை. இயேசு இதைத் தெளிவாக கூறியுள்ளார். (யோ.17:3). பவுலும் கூட தனது நிரூபங்களில் தெளிவாக கூறியுள்ளார் (பிலி.3:10-11, கொலோ.1:9) ஆகவே, தேவனை அறியாமலிருந்தபோது என்பது தேவனுடைய சித்தம், திட்டம் போன்றவற்றை அறியாமலிருந்ததையே பவுல் இங்கு கூறுகிறார்.

(கலா.4:9) இப்போழுது நீங்கள் தேவனை அறிந்திருக்க அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாட்டிற்க்கு நீங்கள் மறுபடியும் திரும்பி அவர்களுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி?

இப்பொழுதோ, “நீங்கள் தேவனை அறிந்திருக்க” என்றால் என்ன? தேவனை அறிந்திருந்த புறஜாதியாரான விசுவாசிகளும் யூதர்களும் இயேசு யார் என்பதை அறிந்து கொண்டு அவருடைய சபையில் இணைந்துள்ளனர். அவர்கள் தேவனை அறிந்து கொண்டதற்கான காரணம் அவர்களது சொந்த அறிவோ ஞானமோ அல்ல. சொந்த அறிவினாலும் ஞானத்தினால் ஒருவனும் தேவனை அறிந்து கொள்ள இயலாது (1கொரி.1:21). யூதர்கள் வேதத்தை மிகவும் தெளிவாக கற்றிருந்தார்கள். ஆனால் இயேசு யார் என்பதை அறியாமல் அவரை எதிர்த்தார்கள். இதனை இயேசு தெளிவாக நமக்கு தெரிவிக்கின்றார். தேவன் தம்மை ஒருவனுக்கு வெளிப்படுத்த சித்தங்கொண்டால் ஒழிய ஒருவராலும் அவரை அறிந்துகொள்ள இயலாது. (மாற்.4:11-12 மற்றும் யோ.17:6,25-26). இந்த நிருபத்தை எழுதிய பவுலும் கூட இயேசுவை அறியாதிருந்தார். ஆனால் தேவன் தம்மை வெளிப்படுத்திய போது தான் பவுல் தேவனை அறிந்து கொண்டார்.

அன்பானவர்களே! நாமும் கிறிஸ்துவையும், அவருடைய சிந்தையைப் பற்றிய அறிவிலும், அவருடைய அன்பிலும், நிலைத்து. அறியாமையின் காலத்தை நம்மைவிட்டு அகற்றினால் கிறிஸ்துவின் அன்பையும் அரவணைப்பையும் பெறலாம்.

**- நெல்சன் சோபித ராஜ்.**

# Women’s Fellowship Special Service

Date: 26-05-2017

Day: Friday

Time: 7 pm

Place: Oasis Church Centre Main worship Hall

# WORSHIP TIMINGS – MAY - 2017
## MAIN WORSHIP HALL, OASIS HOSPITAL COMPOUND, AL AIN.

| | | |
|---|---|---|
| 1st & 3rd FRIDAYS | 7.00 pm | *COMMUNION SERVICE* |
| 2nd & 4th FRIDAYS | 7.00 pm | *EVENING SERVICE* |
| 2nd & 4th FRIDAYS | 6.30 pm | *BIBLE STUDY* |
| EVERY FRIDAYS | 6.30 pm | *JUNIOR CHURCH* |

## PARSONAGE, AL MUWAIJI

| | | |
|---|---|---|
| 05.05.2017 FRIDAY | 11.30 am | *FASTING PRAYER* |
| 13.05.2017 SATURDAY | 07.30 pm | *WOMEN'S FELLOWSHIP PRAYER CELL* |
| 20.05.2017 SATURDAY | 07.00 pm | *MEN'S FELLOWSHIP PRAYER CELL & CAMP MINISTRY* |
| 31.05.2017 WEDNESDAY | 11.30 pm | *MONTH END PRAYER* |

# Daily Bible Reading May – 2017

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங்.1:2)

| Date | Day | Morning | | Evening | |
|---|---|---|---|---|---|
| 1 | Mon | 1Samuel.22 | 1சாமுவேல்.22 | Luke.7 | லூக்கா.7 |
| 2 | Tue | 1Samuel.23 | 1சாமுவேல்.23 | Luke.8 | லூக்கா.8 |
| 3 | Wed | 1Samuel.24 | 1சாமுவேல்.24 | Luke.9 | லூக்கா.9 |
| 4 | Thu | 1Samuel.25 | 1சாமுவேல்.25 | Luke.10 | லூக்கா.10 |
| 5 | Fri | 1Samuel.26 | 1சாமுவேல்.26 | Luke.11 | லூக்கா.11 |
| 6 | Sat | 1Samuel.27 | 1சாமுவேல்.27 | Luke.12 | லூக்கா.12 |
| 7 | Sun | 1Samuel.28 | 1சாமுவேல்.28 | Luke.13 | லூக்கா.13 |
| 8 | Mon | 1Samuel.29 | 1சாமுவேல்.29 | Luke.14 | லூக்கா.14 |
| 9 | Tue | 1Samuel.30 | 1சாமுவேல்.30 | Luke.15 | லூக்கா.15 |
| 10 | Wed | 1Samuel.31 | 1சாமுவேல்.31 | Luke.16 | லூக்கா.16 |
| 11 | Thu | II Samuel.1 | 2சாமுவேல்.1 | Luke.17 | லூக்கா.17 |
| 12 | Fri | II Samuel.2 | 2சாமுவேல்.2 | Luke.18 | லூக்கா.18 |
| 13 | Sat | II Samuel.3 | 2சாமுவேல்.3 | Luke.19 | லூக்கா.19 |
| 14 | Sun | II Samuel.4 | 2சாமுவேல்.4 | Luke.20 | லூக்கா.20 |
| 15 | Mon | II Samuel.5 | 2சாமுவேல்.5 | Luke.21 | லூக்கா.21 |
| 16 | Tue | II Samuel.6 | 2சாமுவேல்.6 | Luke.22 | லூக்கா.22 |
| 17 | Wed | II Samuel.7 | 2சாமுவேல்.7 | Luke.23 | லூக்கா.23 |
| 18 | Thu | II Samuel.8 | 2சாமுவேல்.8 | Luke.24 | லூக்கா.24 |
| 19 | Fri | II Samuel.9 | 2சாமுவேல்.9 | John.1 | யோவான்.1 |
| 20 | Sat | II Samuel.10 | 2சாமுவேல்.10 | John.2 | யோவான்.2 |
| 21 | Sun | II Samuel.11 | 2சாமுவேல்.11 | John.3 | யோவான்.3 |
| 22 | Mon | II Samuel.12 | 2சாமுவேல்.12 | John.4 | யோவான்.4 |
| 23 | Tue | II Samuel.13 | 2சாமுவேல்.13 | John.5 | யோவான்.5 |
| 24 | Wed | II Samuel.14 | 2சாமுவேல்.14 | John.6 | யோவான்.6 |
| 25 | Thu | II Samuel.15 | 2சாமுவேல்.15 | John.7 | யோவான்.7 |
| 26 | Fri | II Samuel.16 | 2சாமுவேல்.16 | John.8 | யோவான்.8 |
| 27 | Sat | II Samuel.17 | 2சாமுவேல்.17 | John.9 | யோவான்.9 |
| 28 | Sun | II Samuel.18 | 2சாமுவேல்.18 | John.10 | யோவான்.10 |
| 29 | Mon | II Samuel.19 | 2சாமுவேல்.19 | John.11 | யோவான்.11 |
| 30 | Tue | II Samuel.20 | 2சாமுவேல்.20 | John.12 | யோவான்.12 |
| 31 | Wed | II Samuel.21 | 2சாமுவேல்.21 | John.13 | யோவான்.13 |

# வேதாகமத்தில் பெண்கள் - லீதியாள்

அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக் கொண்டிருந்தாள். பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார். **அப்போஸ்தலர் 16:14**

லீதியாள் சின்ன ஆசியாவிலுள்ள தியத்தீரா ஊராள். இரத்தாம்பரம் விற்பது இவளுடைய தொழில். இவள் யூத மார்க்கத்தைச் சேர்ந்தவள். பிலிப்பு பட்டணத்தில் ஆற்றினருகே பவுல் ஜெபம் செய்யும்போது அங்கு வழக்கமாக கூடி வருகிற ஸ்திரீகளோடு லீதியாளும் வந்து தன்னை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தவள். அதனால் லீதியாளும், அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் எடுத்து கர்த்தருக்காக ஊழியம் செய்து வந்தார்கள்.

லீதியாளைப் போல் உலக வாழ்வில் கடினமாய் உழைக்கும் பெண்களாகிய நாம் , லீதியாளைப் போல் நம்முடைய இருதயத்தைக் கர்த்தருக்காய் திறந்து கொடுத்து நீங்களும் உங்கள் வீட்டாரும் இரட்சிப்படைந்து அவருக்காய் ஊழியம் செய்ய பிரயாசம் எடுத்துக் கொண்டு வருகிறீர்களா? இல்லை உலக பணியே போதுமென்று உங்களுடைய காலத்தை பாழ்க்கடித்து உங்களுடைய குடும்பத்திற்கு இரட்சிப்பு என்ற உடுப்பை உடுத்துவிக்காமல் இருக்கிறீர்களா? சிந்தனை செய்யுங்கள். உங்கள் நேரத்தை உலக பணிக்கு எவ்வளவு செலவழிக்கிறீர்களோ அதே போல் தேவனுடைய காரியங்களுக்கும் உங்கள் நேரங்களை செலவிடும் போது உங்கள் காரியங்களை தேவன் பார்த்துக்கொள்வார். லீதியாளைப் போல் உங்கள் உள்ளத்தை திறந்து தேவனைத் துதியுங்கள்.

என் சாமர்த்தியமும், என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தை எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கையாயிருந்து உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக. **உபாகமம் 8:17,18.**

கர்த்தாவே, அடியாளின் கையின் பிரயாசத்தை ஆசிர்வதிக்கிறீர். அடியாளும் உம்முடைய ஊழியத்தை அர்ப்பணிப்போடு செய்ய கிருபை தாரும் என்று அனுதினமும் தேவசமூகத்தில் ஜெபத்தில் நிற்ப்போம் . ஆமென்.

Mrs.ஜெனிபர் டேவிட்சன்

**சுவிசேஷ ஊழியம்**

நமது திருச்சபையால் தாங்கப்படும் DMPB மிஷனரிகள்

மிஷனரி:**திரு.P.சூரிபால் சதா**

பணித்தளம்:நீலமங்கலம் வட்டாரம்:மாத்தூர்

**துதி செலுத்த வேண்டிய நிகழ்வுகள்:**

- கருணாபுரத்தில் ஜெபத்திற்கு புதிதாய்வரும் வாலிபர்களுக்காக துதிப்போம்.
- விபினுக்கு ஏற்பட்ட விபத்திலிருந்து கர்த்தர் பாதுகாத்ததற்காக துதிப்போம்.
- மனோகரனுக்கு வெளிநாட்டில் வேலை கிடைத்ததற்காக துதிப்போம்.

**ஜெப வேண்டுகோள்:**

- கவிதாவின் திருமணத்திற்காக ஜெபிப்போம்.
- கிங்ஸ்டன் குடும்ப ஆசீர்வாதத்திற்காக ஜெபிப்போம்.

மிஷனரி:**திரு.Rகிறிஸ்டோபர்**

பணித்தளம்:உள்சக்கடி வட்டாரம்:குருகிலாமூர்

**துதி செலுத்த வேண்டிய நிகழ்வுகள்:**

- ஊழியத்தில் ஆண்டவர் தந்துவரும் வழிகாட்டுதலுக்காக, பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

**ஜெப வேண்டுகோள்:**

- சௌமியா, தமிழ்ச்செல்வன், ரஞ்சித் அம்மை வியாதியிலிருந்து சுகமடைய ஜெபிப்போம்.
- பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் குள்ளப்பன் அவர்களுக்காக ஜெபிப்போம்.
- கைமுறிவினால் பாதிக்கப்பட்டிருக்கும் சந்துருவிற்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

- இழுப்பு வியாதியினால் கஷ்டப்படும் அமுதாவின் சுகத்திற்காக ஜெபிப்போம்.
- வாசுதேவன், செல்வி, வடிவேல் உடல் பெலவீனத்திலிருந்து சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

## *வேத வினா விடைப் போட்டி – 30 ( மே)*

**( 2.இராஜாக்கள்.14-25 அதி.)**

1. எசேக்கியா வியாதிப்பட்டிருக்கையில் வெகுமதி கொடுத்து அனுப்பிய ராஜா யார்?
2. அமத்சியா ஏதோமியரை எந்த இடத்தில் மடங்கடித்தான்?
3. யோசியாவின் காலத்தில் இருந்த ஆசாரியன் யார்?
4. தன் குமாரனை தீக்கடக்கப்பண்ணின ராஜா யார்?
5. அசீரியன் பாளயத்தில கர்த்தரின் தூதன் எத்தனைபேரை சங்கரித்தான்?
6. பாபிலோன் ராஜாவின் காவல் சேனாதிபதி யார்?
7. அமத்சியா ராஜாவின் தாயின் பேர் என்ன?
8. சமாரியாவின்______ நூலையும், ஆகாப் வீட்டின்______ நூலையும் பிடிப்பேன்
9. தன் மரணநாள் மட்டும் குஷ்டரோகியாயிருந்த ராஜா யார்?
10. அசீரியா ராஜாவை சேவிக்காமல் அவன் அதிகாரத்தை தள்ளிவிட்டவன் யார்?

***குறிப்பு:*** விடைகளுக்குரிய அதிகாரமும் வசனமும் குறிப்பிட்டு இந்த மே மாதம் 20–ஆம் தேதிக்கு முன் ஆயருக்கு அனுப்பி வைக்கவும்.

### ஏப்ரல் **மாத விடைகள்**

1. 2.இராஜாக்கள்.8:10
2. 2.இராஜாக்கள்.6:25
3. 2.இராஜாக்கள்.12:7,8
4. 2.இராஜாக்கள்.3:35
5. 2.இராஜாக்கள்.9:25
6. 2.இராஜாக்கள்.13:14
7. 2.இராஜாக்கள்.7:17

8. 2.இராஜாக்கள்.11:1
9. 2.இராஜாக்கள்.2:9
10. 2.இராஜாக்கள்.10:30,31

## ஏப்ரல் மாத வேத வினா விடைப் போட்டியில் சரியான விடைகள் எழுதியவர்கள்

1. திருமதி. ஜோனிஷ் ஹெர்சில்
2. திருமதி. பிப்லின் நெல்சன்
3. திருமதி. ஹெலன் கம்பீரம்
4. திருமதி. ஷீபா பிரகாஷ்
5. திருமதி. அகஸ்டா லாரன்ஸ்
6. திருமதி. அனிதா சுரேஷ்
7. திருமதி. ஜெயந்தா பெல்வர்
8. திருமதி. ஜெயின் ராஜவேல்

## Me in the Bible

திருமறையில் நான்

*The German artist Rembrandt was a very faithful Christian. Most of his art works were Biblical and Christian.*

*A number of Biblical works , including The Raising of the Cross, Joseph Telling His Dreams, The Stoning of Saint Stephen and Christ in the Storm on the Sea of Galilee are very famous. In these pictures Rembrandt had painted himself as a character in the crowd. Durham suggests that this was because the Bible was for Rembrandt " as a kind of diary, an account of moment in his own life".*



ஜெர்மானிய ஓவியர் ரெம்ப்ரேன்ட் ஒருசிறந்த கிறிஸ்தவர். அவருடைய படைப்புக்களில் அநேகம் திருமறை , கிறிஸ்தவம் சார்ந்ததாகவே உள்ளன.

குறிப்பாக இயேசுவைச் சிலுவையில் ஏற்றுதல் , யோசேப்பு தனது கனவைக் கூறுதல் , தூய ஸ்தேவானைக் கல்லெறிதல் , கலியேயாக் கடலின் புயலில் இயேசு போன்ற ஓவியங்கள் மிகவும் சிறந்தவை. இந்த ஓவியங்களிலெல்லாம் ரெம்ப்ரேன்ட் தன்னையும் கூட்டத்தில் ஒருவராக வரைந்துள்ளார்.


இது குறித்து டுர்ஹாம் என்ற இறையியலாளர் கூறுகையில் " ரெம்ப்ரேன்ட் திருமறையைத் தனக்கானதாகவே கருதினார். அதை அவர் தன்னுடைய நாட்குறிப்பாகவும் வாழ்வின் நிகழ்வுகளைக் குறிக்கும் புனித நூலாகவும் கருதினார் " என்றுகூறுகிறார்.

*There are 13 Disciples in the boat with Christ when they were in the storm in the Sea of Galilee. The Thirteenth disciple is Rembrandt himself.*

கலிலேயாக் கடல் புயலில் இயேசுவுடன் அந்தப் படகில் தன்னையும் சேர்த்து 13 சீடர்களை வரைந்துள்ளார்.

*Are you in the boat with Jesus?*
*No matter about your faith. But we should be with Jesus in the boat.*

இயேசுவுடன் நீங்களும் படகில் இருக்கிறீர்களா?
உங்கள் விசுவாசம் எத்தகையது என்பது சிக்கல் இல்லை.
இயேசுவுடன் நாமிருப்போம்.





Dear Children, please find these words and circle them, cut this puzzle and hand over to Pastor Uncle on or before 20th May 2017.

## <u>Congrats you have done all</u>

1)Mercy 2) Eastrine
3)Joshika Varshini 4) Shelbino
5) Jesvin Bose 6) Annlin Sophia Nelson
7) Angelin Sophia Nelson 8) Merwin Samuel
9) Joshua 10) Roshan
11) Diniya Sunshine 12) Gain 13) Dennis Roger

# Coloring Page for Kids

## The boy David faced the giant Goliath



**Congrats who have done all**

*1)Jayne 2) Erline Berniceraj 3) Eric Jayden 4)Jonathan*
*5)Geovin 6)Jeremiah*
*7)Jemima 8) Johan Sanjo 9) Ridhun 10) Angelin steffina*
*11)Rishon 12) Ziegen*


# YOUTH- CROSSWORD PUZZLES

## "Stop doubting and believe!"

John 20:19-31 (NIV)



© In Touch Ministries



ACROSS

1. To believe in something for which there is no proof
3. A follower of Jesus
7. The body parts at the end of the arms
9. A pointed and headed fastener designed to be pounded into wood
10. To be in a state of pleasure or delight
11. An entrance into a building or room

DOWN

2. One of two babies born at the same time
3. Unwilling to believe that something is true
4. Free from conflict; getting along with others; opposite of war
5. The disciple who would not believe without seeing
6. Not open
8. Breaking a religious or moral law

## Answers for the Previous Month:

Enemy, Good, Evil, Love,
Reward, Friends, Pray, Hate

**<u>Congrats who have done all</u>**

*D.P. Joseph Jovin*

*சிந்தனைக்கு.........*

## பின்பற்றுவதில் உறுதி

**“உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக் குறித்து, என்னோடே பேசவேண்டாம். நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்.” (ரூத்.1:16).**

ரூத் நகோமியையும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரையும், பின்பற்றுவதில் மிகவும் உறுதியாக இருந்தாள். அவளுடைய சொந்த தேசம் மோவாப். மோவாபும், அம்மோனும் லோத்துவினுடைய மகள்கள் பெற்ற சந்ததியாகும். கர்த்தர் மோவாபியரையும், அம்மோனியரையம் வெறுத்தார். அப்படிப்பட்ட ஜாதியிலே வந்த, மோவாபிய பெண்ணான ரூத்துக்கு, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மேல் அன்பு ஏற்பட்டது. கர்த்தரை உறுதியாய்ப் பின்பற்றினாள்.

ரூத்தினுடைய தீர்மானம் நம்முடைய உள்ளத்தை ஆச்சரியப்படுத்துகிறது. ஒருவேளை இது கர்த்தரின் தெரிந்துகொள்ளுதலாக கூட இருக்கலாம். கர்த்தர் நம்மை எதற்காக தெரிந்துகொண்டார், எதற்காக நமக்குப் பாவமன்னிப்பையும், இரட்சிப்பின் சந்தோசத்தையும் தந்தருளினார். இந்த இலவசமாகப் பெற்றுக்கொண்ட சிலாக்கியங்களை, நம்முடைய வாழ்க்கையில் வெளிக் கொணர்வோமானால அல்லது பிரதிபலிப்போமானால், அது நமக்கும் நம்மைச்சுற்றி இருக்கிறவர்கட்கும் ஆசீர்வாதமாக அமையும். அதைத்தான் ரூத் தன்னுடைய வாழ்க்கையில் அப்பியாசப்படுத்திக் காட்டினாள்.

நகோமியும், ரூத்தும் ஒருவரையொருவர் நேசித்தனர். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழும் வாழ்வு எப்படி இருக்கும் என்பதை நமக்கு மாதிரியாக வைத்துச் சென்றிருக்கின்றனர். நகோமி, ரூத்தை அழைத்துச் சென்ற இடம் எது என்று தெரியுமா? பெத்லகேம். ‘‘பெத்லகேம்’’ என்பதற்கு ‘‘அப்பத்தின் வீடு’’ என்றுபொருள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு எனும் நமது முற்பிதாக்கள் சஞ்சரித்த இடம். தாவீதின் ஊரும், கிறிஸ்து பிறந்த இடமும் கூட அதுதான். எப்படி அன்று கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகளை நட்சத்திரம் பெத்லகேமுக்கு நேராக வழி நடத்தியதோ, அதுபோலவே ரூத்தும் நகோமியால் பெத்லகேமுக்கு நேராக வழி நடத்தப்பட்டாள். ஒருபெரிய சந்ததிக்குத் தாயாக உயர்த்தப்பட்டாள். இன்று கிறிஸ்து நம்மை பரம எருசலேமுக்கு நேராக வழி நடத்திக்கொண்டு வருகிறார். பூலோகத்திலே கிறிஸ்துவின் வழிகாட்டுதலைப் பின்பற்றுகிறவர்கள் பரலோகத்தில் என்றென்றும் கிறிஸ்துவோடுகூட அரசாட்சி செய்கிறவர்களாய் இருப்பார்கள் என்பதை வேதம் நமக்குத்திட்டமாய் போதிக்கிறது. ரூத் நகோமியைப் பின்தொடர்ந்து செல்லத் தீர்மானமாய்

இருந்ததுபோல நாமும் கிறிஸ்துவைப் பின்பற்றுவதில் உறுதியாய், தீர்மானமாய் இருப்போம். தேவன் நம்மை மேன்மைக்கு நேராக கொண்டுசெல்வார்.

**"சகோதரரே, நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்".(பிலிப்.3:17)**

M. Nesamony

# KIDS' CORNER: Self-Examination

**TODAY'S VERSE:**

**Lamentations 3:40** *Let us examine our ways and test them, and let us return to the Lord.*

In Prep school we learned that Jonah was in the belly of the big fish for 3 days and 3 nights. God placed him there so Jonah could examine his thoughts and actions, then repent (admit he sinned and make the decision to obey God). Even though God will probably not send a big fish to swallow us when we sin, we are still called to examine our own thoughts and actions, and then repent as Jonah did.

Jonah didn't have any light to see with while in the fish! He had to just be there in the dark. However, he did have the light of God's Word in his soul! That is the most important light of all! He could examine himself and he could see where he needed adjustment! This is what God wanted for him. It doesn't matter where we are if we have God's Word in our souls. What a blessing it is to know this - let us rejoice!

**1Thessalonians 5:16-22** *Rejoice always; pray without ceasing; in everything give thanks; for this is God's will for you in Christ Jesus. Do not quench the Spirit; do not despise prophetic utterances. But examine everything carefully; hold fast to that which is good; abstain from every form of evil.*

We believers are commanded to "examine everything carefully," including our own lives, like Jonah did. We are to especially examine our love for one another, for this is God's will, for God IS love! Love produces good fruit, like mercy, something Jonah was in short supply of before the fish swallowed him up.

**1 John 4:7-9, 12** *Beloved, let us love one another, for love is from God; and everyone who loves is born of God and knows God. The one who does not love does not know God, for God is love. By this the love of God was manifested in us, that God has sent His only begotten Son into the world so that we might live through Him…No one has seen God at any time; if we love one another, God abides in us, and His love is perfected in us.*

Our enemies will try to frustrate God's will for us. Like Jonah's, our own flesh doesn't want us to examine ourselves by the light of the Word. Our flesh, one of our enemies, resists the Holy Spirit's convicting ministry in our lives. In fact, as the Apostle Paul described it, our flesh is at war with the Spirit!

**Galatians 5:16-17** *But I say, walk by the Spirit, and you will not carry out the desire of the flesh. For the flesh sets its desire against the Spirit, and the Spirit against the flesh; for these are in opposition to one another, so that you may not do the things that you please.*

Do you know what this means? It means that both the flesh and the Spirit influence us. It is up to us to examine our own thoughts and actions and decide which influence to follow, which to be "filled" with. We know we are filled with the Spirit when our fruit reveals it to us.

**Gal. 5:22-23** *But the fruit of the Spirit is love, joy, peace, patience, kindness, goodness, faithfulness, gentleness, self-control; against such things there is no law.*

Jonah was bitter, angry, and judgmental, even though he was a chosen prophet of Israel. Being bitter, angry, and judgmental is bad fruit. When we act this way, we are being self-centered, nothing like Jesus. When we humble ourselves under the convicting ministry of God the Holy

Spirit, we will know the truth, and the truth will make us free - free from the bondage of bitterness, anger, and judgement – free to live for others!

We are to: Be kind to one another, tenderhearted, forgiving each other, just as God in Christ also has forgiven you (**Ephesians 4:32**).

Christmas season is upon us and the best presents we could ever give to others is: kindness, forgiveness, and selfless giving. Maybe the greatest gift you'll be able to give someone this Christmas is the Gospel of Jesus Christ! Jesus, after all, is the "indescribable gift" (2 Corinthians 9:15). This gift can't be beat! We want others to enjoy it every second of every day, like we do! Jesus Christ is the way, the truth, and the life! Let us be imitators of God, who IS love, and share the gift of His Son, in this new found love of ours.

**Ephesians 5:1** *Therefore be imitators of God, as beloved children; and walk in love, just as Christ also loved you and gave Himself up for us, an offering and a sacrifice to God as a fragrant aroma.*

If you happen to find yourself in the "belly of the fish", like Jonah was, pray to God and examine yourself. Be humble, regardless of what the Holy Spirit reveals to you. Learn to focus on others, in love, the way Jesus does with you, and you will be delivered!

**John 15:12** *This is My commandment, that you love one another, just as I have loved you.*

## DID YOU KNOW?

Jonah was in the belly of the fish for 3 days and 3 nights in order to "foreshadow" (to hint of what was to come) the 3 days and 3 nights Jesus Christ would spend in the tomb after the cross, before He was resurrected?

**WHAT'S NEW?**

We are made new when we become born again believers! (**2 Corinthians 5:17**)

- Selected Article

**********************

# *மிஷனரி வரலாறு - ஜான் பால்மர்*

இனிக்கும் தமிழினில் இயேசுவைப் பாடுவேன் - என்ற அரசரடிப் புத்துயிர்ப் பாடலின் முதல்சரணத்தில்:

" மரிஉப தேசிகர், மறைஞா சாமுவேல்,
பெரியண்ணன் மற்றும் பால்மருடனே
அரியராம் பரமானந்தர் பாடிய" - இனிக்கும்

என்று அருள்திரு. அறிவர். தயானந்தன் பிரான்சிஸ் பாடுவதை நாம் அறிவோம். இங்கு அவர் குறிப்பிடும் ஜான் பால்மர் மிகப்பெரிய கீர்த்தனைக் கவிஞர் ஆவார்.

**பிறப்பும் இளமைக்காலமும்:**

நாகர்கோவிலுக்கு அடுத்த மயிலாடிஎன்ற சிற்றூரில் 1812 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் நாள் பிறந்தார். இவ்வூரில்தான் தென் திருவிதாங்கூரின் முதல் சீர்திருத்தச் சபைக் கோவில் 1809 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இச்சபை குமரிமாவட்டம , தென் கேரளத் திருச்சபைகளுக்குத் தாய்ச் சபையாக விளங்குகிறது.

ஜான் பால்மரின் தந்தை ஞானப்பிரகாசம் தென் திருவிதாங்கூரின் முதல் கிறிஸ்தவரான மகாராசன் வேதமாணிக்கம் தேசிகரின் நெருங்கிய உறவினராவார். ஆனால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லை. வேதமாணிக்கம்தேசிகர் கிறிஸ்தவம் ஏற்றதால், அவரை ஞானப்பிரகாசம் வெறுத்து , ஆத்திரமடைந்து, சபித்தார். ஆனால் வேதமாணிக்கத்திற்கு ஒரு குறையும் ஏற்படவில்லை. பலமுறை சபித்தும்கூட ஏதும் ஏற்படாத்தைக் கண்ட

வேதமாணிக்கம் " இயேசுதான் உண்மையான கடவுள் " என்றுகூறி , இயேசுவை ஏற்றுக்கொண்டு , திருமுழுக்குப் பெற்றார். அவரது மகன் பால்மருக்கு ஜான் பால்மர் என்ற பெயரிட்டுத் திருமுழுக்குச் செய்வித்தார்.

வேதமாணிக்கம் தேசிகரின் அழைப்பை ஏற்றுத் தரங்கம்பாடியிலிருந்து ஜெர்மன் அருள்தொண்டர் அருள்திரு ரிங்கிள்தௌபே மயிலாடி வந்து திருப்பணியாற்றினார். வேதமாணிக்கம் தேசிகரின் மரபில் வந்த பலரும் மிக உயர்வான நிலையடைந்ததுடன் இறைப்பண்புடன் கிறிஸ்தவ இலக்கியப் பணிகளும் செய்தனர். இவர்களுள் ஜான் பால்மர், தேவ்வரம் முன்ஷியார், அருள்திரு சி. மாசிலாமணி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஜான் பால்மரின் முன்னோர்கள் வைராக்கியமுடைய இந்துக்கள். சோதிடம், மருத்துவம், இலக்கியம் போன்றவற்றில் ஆழ்ந்த அறிவும் ஈடுபாடும் உடையவர்கள். இவர்கள் தொன்மைவாய்ந்த ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். தஞ்சைப் பகுதியிலிருந்து வந்து திருநெல்வேலி நாட்டுப் பகுதியில் குடியேறியவர்கள். பின்னர் அங்கிருந்து நாஞ்சில் நாட்டுப் பகுதியான மயிலாடியில் குடியேறினர்.

**தொடக்க கல்வியும் உயர் கல்வியும்:**

பால்மர் தொடக்கத்தில் தமிழ் பண்டிதர் திருவம்பலத் திண்ணமுதம் பிள்ளை யிடம் தொடக்க கல்வி கற்றார். பின்னர் நாகர்கோவில் இறையியல்பள்ளியில் திருமறைக் கல்வியும் கற்றார். இறையியல் கல்வியில் ஆர்வமுடையவராக இருந்ததால் அவரது தந்தை உயர் கல்விக்காகப் பால்மரைச் சென்னைக்கும் பின்னர் யாழ்பானத்திற்கும் அனுப்பினார்.

**பணிகளும் திருமணமும்:**

உயர்கல்வி முடித்து மீண்டும் மயிலாடிக்கு வந்தார். அப்போது அங்கு இருந்த அருள்திரு மால்ட் அருள்பணியாளரிடம் எழுத்தராகப் பணி செய்தார். அருள்திரு ஆடிஸ் மிஷனரிக்கு தமிழ் கற்றுக் கொடுத்தார்.

1830 ஆம் ஆண்டு ஜூலை 5 ஆம் நாள் பேரின்பம் அம்மாளைத் திருமணம் செய்துகொண்டார். பின்னர் ஆடிஸுடன் சேர்ந்து

குடும்பமாக கோயம்புத்தூர் சென்று அங்கு இறைப்பணியாற்றியபின் மீண்டும் நாகர்கோவிலுக்கு வந்தனர். பால்மர் திருவனந்தபுரத்தில் அச்சுக்கூடத்தில் அச்சகத் திருப்பணியும் செய்தார்.

1845 ஆம் ஆண்டு லண்டன் மிஷனரிச் சங்கம் 50 வது ஆண்டு விழாவின்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கிடையே திருப்பணி செய்வதற்காக " கெம்பீர சத்தம் " என்ற குழு அமைக்கப்பட்டது. அக்குழுவில் பால்மரும் இணைந்து நாகரகோவிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் நற்செய்தி அறிவித்துப் பல சபைகளை நிறுவினார். ஆண்டவரின் வாழ்வை விளக்கும் வண்ணம் " கிறிஸ்தியானம் " என்னும் காவியத்தை உருவாக்கினார்.

**கிறிஸதவக் கீர்த்தனைக் கவிஞர்:**

நாதஸ்வர இசையைக் கேட்பது பால்மருக்கு மிகவும் விருப்பம். அந்நாட்களில் பொது இடங்களில் நாதஸ்வரம் இசைக்கப்படமாட்டாது. கோவில்களில்தான் இசைப்பார்கள். திருவனந்தபுரம் பத்மநாத சுவாமி திருக்கோவிலிலும் இசைக்கப்பட்டது. அங்கு கிறிஸ்தவர் நுழைந்தால் மரண தண்டனைதான். இருப்பினும் பெரிய போர்வையால் தன்னை மூடிக்கொண்டு அக்கோவிலுக்குள் சென்று நாதஸவர இசையை ரசித்துக்கேட்டு மனதமர்த்திக்கொள்வார். வீட்டிற்கு வந்து அதே ராகத்தில் கிறிஸ்தவக் கீர்த்தனை ஒன்று அமைத்துத் தன் சபையாருக்கும் கற்றுக்கொடுத்துவிடுவார். இதனால் அக்கீர்த்தனைகள் மறையாது வாழ்ந்தன.

இவ்வாறு தனது உயிரைப் பணயம் வைத்து ஓர் இசையைக் கற்று வந்து அவர் எழுதிய பாடலே " யேசுவே கிருபாசன பதியே " என்பதாகும். பால்மருடைய வாழ்வு பல வேளைகளில் பல இன்னல்கள், துன்பங்கள், இடர்பாடுகளைக் கண்டதுதான். அத்தகைய வேளைகளிலெல்லாம் அஞ்சாது , தயங்காது, ஆண்டவரைப் பற்றிக்கொண்டு விசுவாச வாழ்வு வாழ்ந்ததுடன் பாடல்கள் எழுதித் தன்னைத் தேற்றிக் கொண்டார். அத்தகைய பாடல்கள்தான் " கிஞ்சிதமும் நெஞ்சே அஞ்சிடாதே " ; " வாராவினை வந்தாலும் சோராதே மன்மே " என்பவை.
மேலும் பால்மர்:

பெத்தலையில் பிறந்தவரைப் போற்றித் துதி மனமே
ஓசன்னா பாடுவோம் இயேசுவின் தாசரே
இந்நாளில் ஏசுநாதர் உயிர்த்தார்
உன்றன் சுயமதியே நெறியென்றுகந்து சாயாதே
கிஞ்சிதமும் நெஞ்சே அஞ்சிடாதே

ஆகிய பாடல்களையும் எழுதினார்.

எளிய கீர்த்தனைகளை எழுதியும் பாடிக்கொண்டும் இறைப்பணியாற்றிய ஜான் பால்மர் 1883 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ஆம் நாள் தமது 71 வது வயதில் ஆண்டவரிடம் ஏகினார்.

*********************

# 10 Things Scripture Says about Being a Father

**1. Don’t provoke your children (Ephesians 6:4)**

The alternative, the scripture suggests, is to raise them to be young people of faith.

**2. Be your child’s “First Teacher” (Proverbs 22:6)**

It’s our responsibility to “train up a child in the way he/she should go.” Not the school, not the government, but you—and that means dad.

**3. Dads need to exemplify a good life (2 Cor. 3: 2-3)**

Scripture teaches that who we are and how we live is like a “letter from God.” Our kids read that letter, every day.

**4. Provide for your family (I Tim. 5: 8)**

This idea covers more than rent and food. As dads it’s our responsibility to make sure our family’s needs are addressed across the board. No ducking out of this one.

**5. Good dads discipline their children (Proverbs 13: 24)**

The one who loves their children, scripture says, "is careful to discipline them." This is also about proactive leadership in our homes.

**6. Dads spend time with their children, and it's not empty time (Deut. 6: 6-9).**

The scriptures are clear that dads must engage their children in the kind of deep, heart-to-heart conversations that impart more than facts, but teach wisdom. Schedule some regular "conversational walks" with your children, one on one. Family time that counts.

**7. Compassion is a "dad" characteristic**

As a father has compassion on his children," Psalm 103:13 points out, "so the LORD has compassion."

**8. "Put your money where your mouth is"**

Well, not in those exact words. But James 1:22 instructs us to not only be "hearers" of God's word, but "doers" also.

**9. Dads never give up on their kids**

The story of "The Prodigal Son" (Luke 15:20-24) is the story of a father who never gives up hope and is ready to receive his child back with open arms. We can discipline, we can hold accountable, but we must never give up.

**10. Dads pray for their children (1 Chronicles 29:19)**

King David prayed for his son, Solomon. Children who know without any doubt that their dads pray for them every day own a deep sense of love and security.

- Selected Article

# International Workers Day - 1st May
# அனைத்துலக உழைப்பாளர் நாள் - மே 1

சங்:138:8
கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்.

இன்று அனைத்துலக உழைப்பாளர் தினம்.

* 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேலை நாடுகளிலும் அமெரிக்காவிலும் - ஏன் உலகம் முழுவதிலும் மிகப் பெரிய தொழில் புரட்சி / வளர்ச்சி ஏற்பட்டது.
அநேகம் நூற்பு ஆலைகள், உலோக ஆலைகள், ரயில்- சாலை வழிகள் என்று பல்வேறு தொழில்கள் பெருகின.
* மக்கள் அநேகர் பல தொழில்களில் ஈடுபட்டு, உழைத்து ஊதியம் பெற்றனர்.
* அக்காலத்தில் தொழிற்சாலைகள் அனைத்தும் தனியார் வசமே இருந்தன.
* தங்கள் உற்பத்தியைப் பெருக்கவும், அதிகமான வருமானம் ஈட்டவும் தொழிலதிபர்கள் அனைவரும் தொழிலாளர்களுக்கு அதிகமான வேலை கொடுத்தனர்.
* ஒரு நாளில் 18 மணி நேரம் வேலை செய்ய வற்புறுத்தினர். தொழிலாளர்கள் ஈவு இரக்கம் இல்லாமல் கடுமையாக வேலை வாங்கப்பட்டனர்.
* ஆனால் மிக குறைந்த அளவே ஊதியம் கொடுத்தனர். வசதிகளும் இல்லை.
* பெண்களும் சிறுவர்களும் மிகவும் ஒடுக்கப்பட்டார்கள்.
* வேலையை விட்டுப் போகவும் முடியாது. கொத்தடிமைகளாகவே இருந்தனர்.

இதனால் 1888 ஆம் ஆண்டு அமெரிக்காவில் தொழிலாளர்கள் அனைவரும் புரட்சி செய்தனர்.
பல வேலை நிறுத்தங்கள் செய்தனர்.
தொழிற்சாலைகள் இயங்கவில்லை.
தொழிலதிபர்கள் தொழிலாளர்களுக்குப் பல வகைகளில் தொல்லைகள் கொடுத்தனர்.

ஆனாலும் தொழிலாளர்கள் அனைவரும் ஓரணியாக நின்று வேலை நிறுத்தங்களைத் தொடர்ந்தனர்.
இதனால் வருமானம் மிகவும் குறைந்தது.
இதைக்கண்டு அஞ்சிய தொழில் அதிபர்கள் இறங்கினர்.

* இதனால்:
8 மணி நேரம் மட்டும் ஒருவர் வேலை செய்ய வேண்டும்.
கூடுதல் ஊதியம் கொடுக்கப்படும்.
அனைத்து வசதிகளையும் தொழிற்சாலைகள் செய்து கொடுக்கும்.

* இந்த ஏற்பாட்டைத் தொழிலாளர்கள் ஏற்றனர்.

* இதேபோல் 1917 ஆம்ஆண்டு ரஷ்யா - மாஸகோவில் தொழிலாளர்கள் மிகப்பெரிய புரட்சியில் ஈடுபட்டு, வெற்றியும் பெற்றனர்.
* அதன் பின் வந்த காலத்தில் கம்யூனிச ஆட்சியில் அனைத்துத் தொழிற்சாலைகளையும் அரசாங்கமே ஏற்று நடத்தியது.

*இந்த தொழிளார் புரட்சியின் நினைவாக மே மாதம் முதலாம் தேதியை உழைப்பாளர் தினமாக உழைப்பாளர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டாடுகின்றனர்.

* கிறிஸ்தவத் திருச்சபையில் கத்தோலிக்கத் திருச்சபை தூய யோசேப்பு ஒரு தச்சுத் தொழிலாளி. ஆகவே இந்த நாளை " St. Joseph's Day - சூசையப்பர் தினம் " என்று கொண்டாடுவோம் என் தீர்மானித்தது.

**- தொகுப்பு**

---

ஒரு கிறிஸ்தவத் தொழிலாளி தம் வேலையை எவ்வாறு செய்ய வேண்டும் ?

1) கர்த்தருக்கென்று மனப்பூர்வமாயச் செய்ய வேண்டும். கொலோ:3:24

2). உண்மையாய்ச் செய்யுங்கள்: 2 நாளா:34:12

3). பிறருக்குக் கொடுப்பதற்கென்று வேலை செய்ய வேண்டும்:எபே:4:28

## ஆராதனை பாடல்கள் - மே 2017

### 05-05-2017

பா: 58 – என் மீட்பர் இரத்தம்
பு: 61 – இதோ மனுஷரின்
கீர்: 29 – கண்களை ஏறெடுப்பேன்
கீர்: 91 – தேன் இனிமையிலும்
பா: 84 – ஆத்துமாவே
பா: 59 – கர்த்தர் என் பக்கமாகில்

### 12-05-2017

பா: 76 – நல் மீட்பர் பட்சம்
பு: 10 – எந்தன் கன்மலை
பா: 92 – அருள் ஏராளமாய்
கீர்: 62 – சத்திய வேதத்தை
பா 103-2 – கர்த்தர் தந்த ஈவுக்காக

### 19-05-2017

பா: 2 – அலங்கார வாசலாலே
பு: 45 – சேனையதிபன் நம்
கீர்: 99 – யேசுவே கிருபாசனப்
கீர்: 86 – அன்பே பிரதானம்
பா: – பயத்தோடும் பக்தியோடும்
பா: 65 – பாதை காட்டும்

### 26-5-2017

பா: 17 - தூய தூய தூயா
பு: 30 - ஸ்தோத்திரம் துதி
கீர்: – பெண்கள் ஐக்கிய
கீர்: 104 – தந்தேன் என்னை
கீர்: 24 – சீர் ஏசு நாதனுக்கு

| அருளுரை தலைப்புகள் - மே 2017 | | | | | |
|---|---|---|---|---|---|
| நாள் | தலைப்பு | ப. ஏற்பாடு | நிருபம் | நற்செய்தி | சங்கீதம் |
| 05.05.2017 | அன்றாட வாழ்வில் உயிர்த்த கிறிஸ்துவுடன் கூட்டுறவு | யாத்.40:34-38 | பிலி.3:8-16 | லூக்.24:13-33 | 23 |
| 12.05.2017 | கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளல் | யாத்.14:10-20 | அப்.16:19-34 | யோவா.14:1-7 | 116 |
| 19.05.2017 | அருட்பணி - கிறிஸ்துவின் அமைதியைப் பகிர்தல் | மீகரி.4:1-7 | பிலி.4:4-9 | லூக்.24:36-49 | 85 |
| 26.05.2017 | தூயாவியாரின் வாக்குறுதி | யோவேல்.2:28-32 | கலாத்.5:22-26 | யோவா.14:15-21 | 42 |